வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் இடையே

# மெட்ரோ ரெயில் பாதையில் டீசல் என்ஜின் சோதனை வெற்றி

சென்னை, டிச.27– வண்ணாரப்பேட்டை– திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்ட மெட்ரோ ரெயில் பாதையில் வெற்றிகரமாக டீசல் என்ஜினை இயக்கி சோதனை நடத்தப்பட்டுள்ளது என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வண்ணாரப்பேட்டை– திருவொற்றியூர்

சென்னையில் வண்ணாரப்பேட்டை– திருவொற்றியூர் விம்கோ நகர் வரை மெட்ரோ ரெயிலுக்கான விரிவாக்கப் பணிகளை, கடந்த 2016–ம் ஆண்டு மறைந்த முதல்–அமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார். இதில், சுரங்கப்பாதையில் தியாகராஜர் கல்லூரி, தண்டையார்பேட்டை ஆகிய இரண்டு ரெயில் நிலையங்களும், உயர்த்தப்பட்ட பாதையில் புதுவண்ணாரப்பேட்டை, சுங்கச்சாவடி, காலடிப்பேட்டை, திருவொற்றியூர் தேரடி, திருவொற்றியூர், விம்கோ நகர் ஆகிய 6 மெட்ரோ ரெயில் நிலையங்களும் அமைக்கப்பட்டு உள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் பணிகளை முடித்து சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு ஜூன் மாதம் ரெயில் சேவையை தொடங்க திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் கொரோனா தொற்று பரவல் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் பணிகளில் தொய்வு ஏற்பட்டது.

இந்தநிலையில் தற்போது பணிகள் முடிக்கப்பட்டு நேற்று டீசல் என்ஜின் இயக்கப்பட்டு சோதனை நடந்தது.

## டீசல் என்ஜின் சோதனை ஓட்டம்

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் விம்கோ நகர் வரை 9.051 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரூ.3 ஆயிரத்து 770 கோடி மதிப்பில் மெட்ரோ ரெயில் சேவைக்கான ரெயில் பாதை, ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முற்றிலுமாக நிறைவடைந்து விட்டது. இன்று (நேற்று) டீசல் என்ஜின் மூலம் வண்ணாரப்பேட்டை– திருவொற்றியூர் இடையே அமைக்கப்பட்டு உள்ள 2 பாதைகளிலும் முதல் கட்ட சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டு உள்ளது.

இந்த சோதனையில் கற்கள் போடாமல் அமைக்கப்பட்டுள்ள ரெயில் தண்டவாளங்களின் உறுதி தன்மை, உயர் மின் அழுத்த பாதைகள், சிக்னல், சுரங்கப்பாதையில் காற்றோட்டம், ரெயில் ஓடும்போது தண்டவாளம் அருகில் உள்ள கட்டுமானங்களில் ரெயில் மோதாமல் இருக்கும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளதா? ஆகியவை சோதனை செய்யப்பட்டன.

## ஜனவரி இறுதியில்...

நாளை (இன்று) மெட்ரோ ரெயிலை இயக்கி சிக்னல் சோதனை நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. தொடர்ந்து வரும் நாட்களில் சுரங்க ரெயில் நிலையத்தில் அமைக்கப்பட்டு உள்ள ஸ்கிரீன் கதவுகள், தானியங்கி கட்டணம் சேகரிப்பு எந்திரம் செயல்படும் விதம் ரெயிலில் உள்ள கருவிகளால் முறையாக தண்டவாளம் அருகில் உள்ள சிக்னல்களுக்கு ஏற்ப இயக்க முடிகிறதா? என்பது குறித்தும், வேகமாக மெட்ரோ ரெயிலை இயக்கியும் சோதனை நடத்தப்படுகிறது.

இந்த சோதனைகள் அனைத்தும் வெற்றிகரமாக முடிந்த பின்னர், ஜனவரி முதல் அல்லது 2–வது வாரத்தில் பாதுகாப்பு ஆணையரின் சோதனை நடக்கும்.

தொடர்ந்து ஜனவரி இறுதியில் ரெயில் போக்குவரத்தை தொடங்கி வடசென்னையையும், தென்சென்னையையும் மெட்ரோ ரெயில் மூலம் இணைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.



மெட்ரோ ரெயில் போக்குவரத்துக்காக வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோநகர் வரை புதிதாக அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையில் டீசல் என்ஜினை இயக்கி சோதனை நடத்தப்பட்ட போது எடுத்தபடம்.